முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், அரியலூர்

**OS.No. 17/2025**

2026 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 10 ஆம் நாள் வியாழக்கிழமை **வா.சா. 2** வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி. நிர்மலா, கிரேடு 1 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | எழிலரசி | கிராமம் | |
| த/பெ | | வட்டம் | |
| வயது | | தொழில் | |

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் மூன்றாம் தரப்பினர். எனது சத்திய பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையவைதான். எனது தரப்பில் ஆவணம் எதுவும் குறியீடு செய்யபடப்வில்லை.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

எனது சொந்த ஊர் பொன்பரப்பி கிராமம். வாதி எங்கள் ஊரில் உள்ள இனிப்பு கடையில் வேலை பார்த்ததன் அடிப்படையில் எனக்கு 15 ஆண்டுகளாக தெரியும். சங்கரை எனக்கு பத்திரிக்கை நிரூபர் என்ற அடிப்படையில் எனக்கு தெரியும். அவர் எந்த பத்திரிக்கையில் வேலை செய்கிறார் என்று எனக்கு தெரியாது. வாதி சேடக்குடிகாடு கிராமத்தில் வசித்து வருகிறார். சங்கரும் அதே ஊரை சார்ந்தவர் தான். சங்கர் உயிருடன் இருந்தபோது, வாதிக்கும் சங்கருக்கும் இடையே தொடர்பு இருப்பது குறித்து பிரச்சனை ஏற்பட்ட விவரம் பற்றி தெரியுமா என்றால் தெரியாது. லெட்சுமியின் கணவர் உயிருடன் இல்லை, அவர் இறந்துவிட்டார். லெட்சுமிக்கு சொத்துக்கள் உள்ளதா என்றால் உள்ளது. அவருக்கு எவ்வளவு நிலம் உள்ளது என்றால் தற்போது 3, 3 ½ ஏக்கர் வரை உள்ளது. சங்கர் பாண்டு எழுதி கொடுத்தாக

கூறுகின்ற விவரம் பொய் என்று சொன்னால் சரியல்ல. அவர் பணம் வாங்கியது எனக்கு நேரடியாக தெரியும் என்று கூறுகின்ற விவரம் பொய் என்று சொன்னால் சரியல்ல. சங்கருக்கும் வாதிக்கும் தொடர்பு இருந்ததால், அதனால் ஏற்பட்ட பிரச்சனையின் காரணமாக பிரதிவாதிகளை பழி வாங்க வேண்டி வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. லெட்சுமி எனக்கு வேண்டப்பட்டவர் என்பதால் நான் அவருக்கு அனுசரணையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை–**இல்லை.

(ஒம்) – திருமதி.K.S.ஜெயமங்களம்,<br>
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,<br>
அரியலூர்.